# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.8 |
| Name : | விமல்குமார் |
| Father's/Husband Name: | நாகராஜன் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 47/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.08.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி மணிகண்டன் @ மணி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பாடாலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 21.05.2022 ம் தேதி 08.30 மணிக்கு அரும்பாவூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து நிலைய பொறுப்பில் இருந்தபோது பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கனூர் கிராமத்தை சேர்ந்த சின்னசாமி மகன் கலியமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி எதிரி மணிகண்டன் மற்றும் எதிரியால் திருடப்பட்டதாக சொல்லப்படும் TN25AR0491 என்ற பதிவெண் கொண்ட Passion pro இருசக்கர வாகனத்தையும் காவல்நிலையத்தில் ஆஜர்படுத்தி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று அதன் அடிப்படையில் அரும்பாவூர் காவல் நிலைய கு.எண்.112/2022 இதச பிரிவு 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1–புகார் மேற்படி கலியமூர்த்தி அளித்தது தான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அவ்வாறு நான் பதிவு செய்தததுதான். (அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

ii) பின்னிட்டு 08.30 மணியளவில் காவல் நிலையம் முன்பு வைத்து கலியமூர்த்தி ஆஜர் செய்த வழக்கு சொத்தான TN25AR0491 என்ற பதிவெண் கொண்ட Passion pro இருசக்கர வாகனத்தை தலைமை காவலர் ரமேஷ் மற்றும் மணி ஆகியோர் முன்னிலையில் கைபற்றுதல் மகஜர் தயார் செய்து கைபற்றினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 அவணம் நான் தயார் செய்த கைபற்றுதல் மகஜர் தான். மேற்படி வழக்கு சொத்தை கைபற்றியதற்கு ஆதரவாக படிவம் 91–ஐ நிரப்பி அ.சா.1–கலியமூர்த்தியிடம் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் படிவம் 91 நான் பதிவு செய்தது தான். (அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 புகைபடத்தில் உள்ள இருசக்கர வாகனத்தை தான் மேற்படி கைபற்றுதல் மகஜர் மூலம் நான் கைபற்றினேன்.

iii) வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடமான Veppanthattai HDFC ATM அருகே சென்று சாட்சிகள் இளையபெருமாள், முருகேசன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். என்னிடம் காட்டபடும் பார்வை மகஜர் அவ்வாறு நான் தயார் செய்தது தான். (அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) என்னிடம் காட்டபடும் மாதிரி வரைபடம் அவ்வாறு நான் தயார் செய்தது தான். (அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) சாட்சிகள் கலியமூர்த்தி, தங்கவேல், மணிவண்ணன், பாபு, இளையபெருமாள், முருகேசன், ரமேஷ், மணி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மற்றும் புலன்விசாரணையில் கிடைத்த சங்கதிகளின் அடிப்படையில் எதிரி குற்றம் செய்தது உண்மை என தெரியவந்ததால் அன்றைய தினம் 08.30 மணியளவில் அரும்பாவூர் காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். முதல் விசாரணையை முடித்து தொடர் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை அப்போதைய காவல் உதவி ஆய்வாளர் வினோத் கண்ணன் வசம் அவரிகளிடம் ஒப்படைத்தேன். வழக்கு தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.சத்தியமூர்த்தி என்பவரால் பிரதிநித்துவம் செய்யப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை